பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**14 09 2026 MONDAY 7.15 PM**

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. இந்தியாவில் பல மொழிகள் பேசப்பட்டாலும், மக்களின் உணர்வும், நாட்டுப்பற்றும் ஒரே குரலாக ஒலிக்கும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.
2. பிரிக்ஸ் உச்சிமாநாட்டை சிறப்பாக நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அமைச்சகங்கள், துறைகள் மற்றும் மாநில அரசுகளுக்கு வெளியுறவு அமைச்சகம் பாராட்டு தெரிவித்துள்ளது.
3. கனடாவுடன் இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் யுக்ரைன் நிலைமை குறித்து அந்நாட்டு அமைச்சர் திருமதி அனிதா ஆனந்துடன், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், தொலைபேசியில் பேசினார்.
4. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீரில் 100 நாட்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் போராட்டங்களுக்கு சமரச பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் என்று அப்பகுதிக்கான மனித உரிமைகள் குழு வலியுறுத்தியுள்ளது.
5. அமெரிக்க ஓபன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை ஜெர்மனியின் Alexander Zverev வென்றுள்ளார்.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>

இந்தியாவில் பல மொழிகள் பேசப்பட்டாலும், மக்களின் உணர்வும், நாட்டுப்பற்றும் ஒரே குரலாக ஒலிக்கும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

நவி மும்பையில் இன்று இரண்டு நாள் இந்தி விழா மற்றும் ஆறாவது அகில பாரத ஆட்சிமொழி கருத்தரங்கு ஆகியவற்றை தொடங்கிவைத்து பேசிய அவர், நாட்டின் கலாச்சாரமும், இலக்கியமும் பல மாநில மொழிகளில் பிரதிபலிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்திய மொழிகளின் மையமாக ஹிந்தி திகழ்கிறது என்று குறிப்பிட்ட அவர், நாட்டில் உள்ள அனைத்து மொழிகளின் கண்ணியத்தையும், மதிப்பையும் உறுதி செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

நாடு முழுவதும் கருத்துகளை பகிர்ந்துகொள்வதற்கான பாலமாக ஹிந்தி மொழி விளங்குகிறது என்று கூறினார்.

நாட்டின் ஒற்றுமையை வலுப்படுத்தும் கருவியாகவும் இது பயன்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ராஜ்யபாஷா பாரதி என்ற ஆட்சிமொழி மாதாந்திர பத்திரிகையையும் அவர் வெளியிட்டார்.

பாரதி பன்மொழி மொழிபெயர்ப்பு செல்போன் செயலியையும் அவர் தொடங்கிவைத்தார்.

இந்திய மொழிகளுக்கான முதல் தரவு மையத்தையும் திரு அமித் ஷா இந்நிகழ்ச்சியில் தொடங்கிவைத்தார்.

ராஜ்பாஷா கௌரவ் மற்றும் ராஜ் பாஷா கீர்த்தி விருதுகளையும் இந்நிகழ்ச்சியில் அவர் வழங்கினார்.

இந்த இரண்டு நாள் விழாவில் வந்தே மாதரம் தேசிய பாடலை மையப்படுத்திய விவாதமும் பல்வேறு அமைச்சகங்கள் ஏற்பாடு செய்துள்ள கண்காட்சியும் இவ்விழாவில் இடம்பெறுகிறது.

இந்நிகழ்ச்சியில், உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய், மகாராஷ்ட்ர துணை முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே, வந்தே மாதரம் தேசிய பாடலை இயற்றிய **Bankim Chandra Chattopadhyay**-யின் ஐந்தாவது தலைமுறை வாரிசான **Joydeep Chattopadhyay** உள்ளிட்டோரும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

<<<<<<<>>>>>>

பிரிக்ஸ் உச்சிமாநாட்டை சிறப்பாக நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து மத்திய அரசின் அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கு வெளியுறவு அமைச்சகம் தமது பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்தியா தலைமையேற்று நடத்திய பிரிக்ஸ் உச்சிமாநாட்டு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பதிலும், விழா ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு தலைவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் வசதிகளை ஏற்படுத்தித் தருவதிலும் சிறப்பாக செயல்பட்டதாக தெரிவித்துள்ளது.

உலக அரங்கில் நாட்டின் நற்பெயரை மேன்மைப்படுத்தும் வகையில், பிரிக்ஸ் உச்சிமாநாடு அமைந்திருந்ததாகவும், இதற்கு உதவும் வகையில் செயல்பட்ட அனைத்து மாநில அரசுகளுக்கும் நன்றியையும், பாராட்டையும் தெரிவிப்பதாகவும் வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று கனடா வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி அனிதா ஆனந்துடன், தொலைபேசியில் உரையாடினார்.

இதுகுறித்து டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் யுக்ரைன் நிலைமை குறித்து விவாதித்ததாக தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

வியட்நாமுடன் அரசியல், ராணுவம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு அமைச்சர் Le

**Hoai Trung**-வுடன், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பேச்சு நடத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்திருந்ததாக டாக்டர் ஜெய்சங்கர் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

உற்பத்திக்கான இந்தியா திட்டத்தில் தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதியை அதிகரிப்பது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

வர்த்தகம் மற்றும் முதலீடுகளை பெருக்குவது குறித்தும், வேளாண் உற்பத்திப் பொருட்கள், மருந்துகள் ஆகியவற்றை இருநாடுகளும் பகிர்ந்துகொள்வதற்கான விநியோக சங்கிலி மற்றும் சந்தையை வலுப்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

எரிசக்தி ஒத்துழைப்பு மற்றும் பாரம்பரிய சின்னங்களை பாதுகாப்பதற்கான திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கிழக்கத்திய நாடுகள் வெளியுறவுக்கொள்கை, ஆசியான், இந்தோ — பசிபிக், மகா சாஹர் மற்றும் வளர்ந்துவரும் நாடுகளுக்கான கொள்கைகளில் வியட்நாம் நட்பு நாடாக நீடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

<<<<<<<>>>>>>

அண்ணாவின் பிறந்தநாளை முன்னிட்டு, 180 காவலர்களுக்கு அண்ணா பதக்கங்கள் வழங்க முதலமைச்சர் திரு விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று வெளியிடப்பட்ட மாநில அரசின் செய்திக்குறிப்பில், காவல்துறையினர், சீருடை அலுவலர்கள், சார்நிலை அலுவலர்களுக்கு இந்த பதக்கங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில காவல்துறையில் 138 பேரும், தீயணைப்புத்துறையில் 20 பேரும், சிறைத்துறை அலுவலர்கள் 10 பேரும், ஊர்காவல் படையினர் ஐந்து பேரும், விரல்ரேகை பிரிவில இரண்டு பேரும், தடய அறிவியல் துறையில் நான்கு பேரும் இந்த பதக்கங்களை பெறுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 19-ஆம் தேதியன்று நாகர்கோவில் கடற்கரையில் விளையாடிக்கொண்டிருந்த 9 வயது சிறுவன் சைலேஷை கடலில் நீந்திச் சென்று பத்திரமாக மீட்ட தீயணைப்புத்துறை வீரர் ராஜசேகருக்கு அண்ணா வீர தீர பதக்கம் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் திரு விஜய் தெரிவித்துள்ளார்.

இந்த பதக்கங்கள் பிரிதொரு விழாவில் வழங்கப்படும என்றும் மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

தூத்துக்குடி துறைமுகம் பெரிய கப்பல்களை கையாளும் வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இத்துறைமுகத்தில் முதல் முதலாக மிக நீளமான சரக்கு பெட்டக கப்பல் கையாளப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — லஷ்மணன் — 65 Sec. )***

<<<<<<<>>>>>>

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீரில் உள்ள மனித உரிமைகள் குழு அப்பகுதியில் தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருவதால் மக்களிடையே பதற்றமான சூழல் உருவாகியிருப்பதாக தெரிவித்துள்ளது.

அங்குள்ள **Rawalakot** பகுதியிலும், **Poonch, Sudhnooti** மாவட்டங்களிலும் மக்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

**100** நாட்களுக்கு மேல் தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருவதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

இதனால், மற்றப்பகுதிகளிலும் போராட்டங்கள் தொடர்வதற்கான வாய்ப்புள்ளதாகவும் கூறியுள்ளது.

மக்களிடையே உடனடியாக சமரச பேச்சுக்கள் நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்றும் அந்த மனித உரிமைகள் குழு வலியுறுத்தியுள்ளது.

<<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பு திருப்திகரமாக உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள கடந்த ஆண்டுக்கான அறிக்கையில், ராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக பாதுகாப்பு நிலைமை கட்டுக்குள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறுதியான நடவடிக்கைகள் காரணமாக வன்முறை சம்பவங்கள் கணிசமாக குறைந்துள்ளதாகவும், மக்களின் போராட்டங்களும் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழுக்களுக்கு இடையிலான மோதல்கள் மற்றும் கல் எறிதல் சம்பவங்கள் கடந்த ஆண்டில் முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

இந்திய கடற்படை தலைமை தளபதி அட்மிரல் கிருஷ்ணா சுவாமிநாதன், நியூசிலாந்தின் கடற்படை தலைமை தளபதி **Rear Admiral Garin Golding-**வுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

இருநாட்டு கடற்படைகளுக்கு இடையிலான தொடர்புகளை விரிவுபடுத்துவது, இணைந்து செயலாற்றுவது மற்றும் கடல்சார் தகவல்களை அதிக அளவில் பகிர்ந்துகொள்வது உள்ளிட்டவை குறித்து இரு அதிகாரிகளும் விவாதித்தனர்.

அடுத்த ஆண்டு இருநாட்டு கடற்படைகளின் கூட்டு ராணுவப் பயிற்சியை தொடங்குவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்தியா — நியூசிலாந்து கடற்படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு இந்த பேச்சுவார்த்தையின் மூலம் வலுப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, ஆஸ்திரேலியா தலைநகர் கான்பராவில் அந்நாட்டு ராணுவ தளபதி அட்மிரல் **Mark Hammond-**ஐ சந்தித்து இருநாட்டு கடற்படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அட்மிரல் கிருஷ்ணா சுவாமிநாதன் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தோ — பசிபிக் மண்டலத்தில் கடல்சார் பாதுகாப்பு, அரசியல் ஸ்திரத்தன்மை உள்ளிட்டவை குறித்தும் அவர் விவாதித்தார்.

<<<<<<<>>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

அமெரிக்க ஓபன் டென்னிஸ் பட்டத்தை ஜெர்மனியின் Alexander Zverev வென்றுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் அவர், **6-3, 7-6, 5-7, 6-2** என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் Ben Shelton வென்றார்.

<<<<<<<**END**>>>>>>